I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.154/2021 நாள் : 25.06.2026 பி.சா.3– திரு. தனசிங்.</u>

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கு 2021ல் தாக்கல் செய்யப்பட்டது. நான் 2023ல் சொத்தை கிரையம் பெற்றேன். அப்போது இந்த வழக்கு நிலுவையில் இருந்தது குறித்து தற்போது தெரிந்து கொண்டேன். சொத்தை வாங்குவதற்கு முன்பாக வில்லங்கம் போட்டுப் பார்த்தேன். 36 வருடங்களுக்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன். வில்லங்கத்தில் காட்டப்பட்டுள்ள ஆவணங்களை பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்துப் பார்த்தேன். தாவா சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு 1ம் பிரதிவாதிக்கு ஏற்பாடு ஆவணம் எழுதிக் கொடுத்து பிறகு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கினார் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் லாரி வியாபாரம் செய்து வருகிறேன். மதுரை புறவழிச்சாலையில் டைமண்ட் காலனியில் அய்யனார் டிரான்ஸ்போர்ட் காந்தி லாரி ஷெட் என்ற பெயரில் லாரி புக்கிங் ஆபீஸ் நடத்தி வருகிறேன். 1, 2 பிரதிவாதிகளும் அதே தொழில்தான் செய்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதி லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவராக இருந்தார். அதனால் 1ம் பிரதிவாதியைப் பற்றி எனக்குத் தெரியும். 1ம் பிரதிவாதி சொத்துக்களை தன் தம்பியான 2ம் பிரதிவாதி பெயரில் வாங்கினார் என்றால் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்ய ஒப்புக் கொண்டு வா.சா.ஆ1 கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்குத் தெரியாது. வாதியை எனக்குத் தெரியாது. இதுவரை நான் அவரை பார்த்ததில்லை. 2ம் பிரதிவாதி தனியாக

லாரி தொழில் செய்து வருகிறார். தற்போது புறவழிச்சாலையில் தொழில் செய்து வருகிறார். தாவா சொத்தில் தற்போது 1ம் பிரதிவாதி இருக்கிறார் என்றால் நான்தான் இருக்கிறேன். தாவா சொத்தில் நான் தொழில் செய்யவில்லை. தற்போது பூட்டியிருக்கிறது. எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் கருத்து வேறுபாடு இல்லை. 2, 3 பிரதிவாதிகளும், நானும் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு வழக்கு நிலுவையில் இருக்கும்போது என் பெயரில் கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. வங்கிக் கணக்கு மூலமாகத்தான் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டது. தாவா சொத்தின் அனுபவம் தற்போது 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.25 19:43:05 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.